## *16*

# நற்செய்தியைப் பகிர்ந்து கொண்ட மனிதர்கள்

## (2 இராஜாக்கள் 7:3–16)

*நமது முந்திய பாடம் சீரியர்கள் சமாரியாவை முற்றுகையிட்டதை சுற்றி அமைந்திருந்தது. உணவு பற்றாக்குறை ஏற்பட்டபடியால். பட்டணத்தில் இருந்த மக்கள் மிகவும் நம்பிக்கையற்றவர்களாக மாறினார்கள். போஷாக்கை பெறும்படியான அவர்களுடைய தீவிர முயற்சியில், அவர்கள் தேவன் மற்றும் இயற்கைக்கு எதிராக பாவம் செய்தார்கள்.*

*பட்டினிகிடந்தவர்களில் நான்கு தொழுநோயாளிகள் இருந்தனர். இந்த பாடம் அந்த நான்கு நபர்களின்மேல் கவனம் செலுத்துகிறது. நான் அவர்களை, "நற்செய்தியை பகிர்ந்து கொண்ட மனிதர்கள்" என அழைக்கிறேன். அவர்களுடைய கதையை நாம் மீள்பார்வையிடும் போது, நாம் எனக்கும் உங்களுக்கும் நற்செய்தியை அறிவிப்பதில் உள்ள பொருப்பினை வலியுறுத்துவோம்.*

## *அப்போதைய நற்செய்தி (7:3-16)*

**அவர்களுக்கான நற்செய்தி**

"குஷ்டரோகிகளான நாலுபேர்[1] ஒலிமுகவாசலில் இருந்தார்கள்" (வசனம் 3அ). நாகமானைப் பற்றிய நமது பாடத்தில், பயங்கரமான வியாதியாகிய குஷ்டரோகத்தை குறித்து நாம் விவாதித்தோம். இஸ்ரவேல் தேசத்தில், குஷ்டரோகிகள் பட்டணங்கள் மற்றும் நகரங்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை (காண்க லேவியராகமம் 13:46; எண்ணாகமம் 5:2, 3). இந்த நான்கு பேரும் பட்டணத்தின் நுழைவு வாயிலுக்கு அருகாமையில், அவ்வழியாக வந்து போகிறவர்கள் ஏதாவது உணவு துண்டுகளை தங்கள் பக்கம் வீசி எறிவார்கள் என்ற நம்பிக்கையோடு நெருக்கமாய் தங்கிருந்தார்கள். இருப்பினும், இவ்விதம் பகிர்ந்து கொள்வதற்கான உணவு கூட இப்போது இருக்கவில்லை. பட்டணத்திற்கு உள் இருந்தவர்களைப்போல, இந்த குஷ்டரோகிகளும் பட்டினியால் மடிந்து கொண்டிருந்தார்கள்.

இந்த நால்வரும் ஒரு ஆலோசனை செய்தார்கள்: "இங்கே இருந்து சாக வேண்டியது என்ன?" (2 இராஜாக்கள் 7:3ஆ). அவர் *ஏதாவது* செய்ய வேண்டியிருந்தது, அதை *சீக்கிரமாக* செய்ய வேண்டியிருந்தது. " 'பட்டணத்திற்குள் போவோமென்றாலும் பட்டணத்தில்' பஞ்சம் உண்டாயிருக்கிறதினால் அங்கே சாவோம்" (வசனம் 4அ). அவர்கள் ஒருவழியாக பட்டணத்திற்குள் பிரவேசித்தாலும், அவர்களுடைய சூழ்நிலை

மேம்படப்போவதில்லை. இருப்பினும், "நாம் இங்கே இருந்தாலும் சாவோம்" (வசனம் 4ஆ).

முடிவாக, "ஆகையால், இப்போது சீரியருடைய இராணுவத்துக்குப் போவோம் வாருங்கள்; அவர்கள் நம்மை உயிரோடே வைத்தால் பிழைக்கிறோம்; நம்மை கொன்றால் சாகிறோம் ..." என்று தீர்மானித்தார்கள் (வசனம் 4இ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "அவர்கள் நமக்கு செய்ய சாத்தியமான மிக மோசமான காரியம் நம்மை கொல்வதாக இருக்கும், மேலும் எப்படி இருந்தாலும் நாம் சாகத்தான் போகிறோம். பட்டினியால் மெல்ல மெல்ல சாவதைக் காட்டிலும் பட்டயத்தால் உடனே சாவது விரும்பித் தெரிந்தெடுக்கப்படுவதாக இருக்கிறது. மேலும் யாருக்கு தெரியும்? அவர்கள் ஒருவேளை நம்மை போர் கைதிகளாக வைத்து நமக்கு உணவளிக்கலாம்."

இப்படியாக, "சீரியருடைய இராணுவத்திற்குப் போக இருட்டோடே எழுந்திருந்து ..." (வசனம் 5அ). அவர்கள் ஏன் இருட்டோடே போனார்கள் என்பது பற்றி எழுத்தாளர்கள் பல்வேறு விதமாக யூகிக்கிறார்கள். அதற்கான பதில் சுலபமானது. அவர்கள் முடிவெடுத்தவுடனே, செயல்படத் துவங்கினார்கள்.

குஷ்டரோகிகள் பட்டணத்து வாசலை விட்டு சென்றபோது பயத்தோடு சென்றார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள், "யார் அங்கே! நில்லுங்கள்?" என்ற சத்தத்தை எந்த நேரத்திலும் கேட்கக்கூடும் என எதிர்பார்த்திருக்கலாம். அவர்கள் தரையில் முகங்குப்புற விழுந்து இரக்கத்திற்காக கெஞ்ச ஆயத்தமாயிருந்தார்கள்.

அவர்கள் முகாமை நோக்கி நெருங்குகையில், முகாமிலிருந்து குழப்பமான சத்தங்களை அவர்களால் கேட்க முடிந்தது (காண்க வசனம் 7அ); ஆனால் அவர்கள் அந்த இடத்தை அடைந்தபோது, அங்கே அமைதி நிலவியது (காண்க வசனம் 10). "சீரியருடைய பாளையத்தின் முன்னணியில்[2] வந்தார்கள்; அங்கே ஒருவருமில்லை" (வசனம் 5ஆ). அவர்கள் இருளில் அங்கும் இங்கும் உற்றுநோக்குவதை கவனியுங்கள். குஷ்டரோகிகள், பிற்பாடு ராஜா நினைத்ததுபோல (காண்க வசனம் 12), இது தங்களைப் பிடிப்பதற்கான ஒரு கண்ணி என நினைத்தார்கள்; ஆனால் உண்மையில் அங்கே ஒருவரும் இருக்கவில்லை. முகாம் கைவிடப்பட்டிருந்தது.

"ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப்பண்ணினதினால் ..." (வசனம் 6அ). சில விளக்கவுரையாளர்கள் கர்த்தர் இதை *எப்படி* செய்தார் என்பதை விளக்குவது தங்கள் கடமை என நினைத்தார்கள். சிலர், இது ஒரு இயற்கையான நிகழ்வு என்று "விளக்குவதற்கு" முயற்சித்தார்கள். விசுவாசிகளை பொருத்தவரை, தேவன் சீரியர் இந்த இரச்சலைக் கேட்கும்படி செய்தார் என்பதை அறிந்து கொள்வது போதுமானதாக இருக்கிறது. "கர்த்தர் மோவாபியர்களை ஒரு காட்சியின் அற்புதத்தால் தோற்கடித்திருந்தார் [2 இராஜாக்கள் 3:20-23] மற்றும் அவர் இப்போது சீரியரை ஒரு இரைச்சலின் தொனியின் அற்புதத்தால் தோற்கடித்தார்."[3]

இராணுவ வீரர்கள் இந்த இரைச்சலைக் கேட்டபோது, "இதோ, நம்மிடத்தில் போருக்கு வர, இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் இராஜாக்களையும் எகிப்தியரின்[4] இராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் ..." (வசனம் 6ஆ). "ஏத்தியர்கள்" என்பவர்கள் வடக்கு ஆராமிலிருந்த நகர

நாடுகளின் குடிமக்களாயிருந்தார்கள். இவர்கள் ஏத்திய பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் எழுந்தவர்களாயிருந்தார்கள்.[5] இஸ்ரவேலின் ராஜா, வடக்கிலிருந்து தங்களை தாக்குவதற்கு ஏத்தியரையும், தெற்கிலிருந்து தங்களை தாக்குவதற்கு எகிப்தியரையும் கூலி பொருத்தினான் என்ற முடிவுக்கு சீரியர்கள் வந்தார்கள்.

திகிலினால் நிறைந்தவர்களாக, போர் வீரர்கள், "இருட்டோடே எழுந்திருந்து ஓடிப்போய் [குஷ்டரோகிகள் பட்டணத்திலிருந்த புறப்பட்ட அதே நேரத்தில்], தங்கள் கூடாரங்களையும் தங்கள் குதிரைகளையும் தங்கள் கழுதைகளையும் தங்கள் பாளையத்தையும் அவைகள் இருந்த பிரகாரமாக விட்டு, தங்கள் பிராணன் மாத்திரம் தப்பும்படி ஓடிப்போனார்கள்" (வசனம் 7). அவர்கள் குதிரைகளின் மேல் ஏறி வேகமாய் தப்புவது சாத்தியமாயிருந்த போதிலும், அவைகளையும் விட்டு விட்டு ஓடிபோனார்கள் என்பது அவர்கள் எந்த அளவு பயத்தில் உரைந்து போயிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

குஷ்டரோகிகள் எச்சரிக்கையோடு பாளையத்தினுள் நுழைந்தார்கள் (வசனம் 8அ). அவர்கள் அநேகமாக அங்கே எரிந்து கொண்டிருந்த இரவு நெருப்பையும், விலங்குகள் கட்டப்பட்டிருந்ததையும் கண்டார்கள் (காண்க வசனம் 10), ஆனால் மனிதர் எவரையும் காணவில்லை. கூடாரத்திற்குள் எட்டிப்பார்த்து, ஆயத்தப்படுத்தப்பட்ட, ஆனால் உண்ணப்படாத உணவைக்கண்டார்கள்! அவர்கள் ''புசித்துக் குடித்தார்கள்'' (வசனம் 8ஆ); உணவு ஒருபோதும் இதுபோல் சுவையாக இருந்ததில்லை! பின்பு, அவர்கள் வெள்ளி, பொன் மற்றும் வஸ்திரங்களை கண்டு, எடுத்துக்கொண்டுபோய் இருளில் ஒரு இடத்தில் ஒழித்துவைத்தார்கள். அவர்கள் ஒவ்வொரு கூடாரமாக சென்று கொள்ளையிட்டார்கள் (வசனம் 8இ). அவர்கள் இனிமேலும் பிச்சைக்காரர்கள் அல்லை; இப்போது அவர்கள் செல்வந்தர்கள்!

**மற்றவர்களுக்கான நற்செய்தி**

நீண்ட நேரங்கழித்து, ஒருவழியாக அவர்கள் மனச்சாட்சி அவர்களை உணர்த்தியது. அவர்கள் மற்றொரு ஆலோசனை கூட்டம் நடத்தினார்கள். "பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து ..." (வசனம் 9அ). அங்கே அவர்கள் தேவைக்கு தக்கதாகவும் தேவைக்கு அதிகமாகவும் உணவைப் பெற்றிருந்தார்கள், ஆனால் பட்டணத்திற்குள் மக்கள் இன்னமும் பட்டினியால் வாடிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய விவாதத்தில் ஒரு நடைமுறை குறிப்பு அறிமுகம் செய்யப்பட்டது: ''பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம் மேல் சுமரும் ...'' (வசனம் 9ஆ). இது ஒரு நல்ல முடிவாயிருந்தது. பொழுது புலரும்போது, காவலாளிகள் எதிரிகள் போய்விட்டதை அறிந்து கொள்வார்கள். குஷ்டரோகிகள் இந்த செய்தியை தங்களோடு வைத்துக்கொண்டார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள். தேவனிடத்திலிருந்து, ராஜாவிடத்தி லிருந்து மற்றும் மக்களிடத்திலிருந்து வரும் தண்டனையைத் தவிர்க்க முடியாததாயிருந்தது.

நீண்ட காலத்திற்கு முன்னர், பின்வரும் விதத்தில் அமைந்திருந்த ஒரு பழங்காலத்து கதை ஒன்றை வாசித்தேன்: தனது அயலகத்தாருக்கு பயன்படக்கூடிய ஒரு நன்மையான காரியத்தை அறிந்து, அதை அவருக்கு

*மறைத்து வைத்தால், அந்த மனிதன் திருட்டு குற்றமுடையவனாக இருப்பான். உதாரணமாக, ஒரு மனிதன் தன் அயலகத்தாருக்கு அவருடைய குடும்பத்திற்காக உணவு தேவைப்படுகிறது என்பதை அறிந்திருக்கிறார். தன் அயலகத்தார் எங்கே இலவசமாக ஒரு மூட்டை உணவைப் பெற முடியும் என்பதையும் அவர் அறிந்திருந்தும், அதை அவருக்கு தெரிவிக்க தவறிவிட்டார் என வைத்துக்கொள்வோம். அந்த சூழ்நிலையில், அவர் தன் அயலகத்தாரின் வீட்டிற்குள் சென்று, ஒரு சாக்கு மாவை திருடி வந்துவிட்ட குற்றத்திற்கு உள்ளானவனாக கருதப்படுவான். இந்த குஷ்டரோகிகள் கிடைக்கும் உணவைக் குறித்து சமாரிய மக்களுக்கு சொல்லத் தவறினால், அவர்கள் திருடராக கருதப்படுவார்கள்.*

*அவர்கள், "இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள்" என்றார்கள் (வசனம் 9இ). அப்படியே அவர்கள் பட்டணத்து காவலாளிகளிடத்தில் வந்து தாங்கள் சீரியரின் இராணுவமுகாமில் கண்டதை உறக்கக் கூறினார்கள் (வசனம் 10). வாயிற்காவலர்கள் அதை அரண்மனைக்கு அறிவித்தார்கள் (வசனம் 11).*

*உதவியாளர்கள் ராஜாவை எழுப்பி, செய்தியை அறிவித்தார்கள் (காண்க வசனம் 12அ). "ஆகவே இப்படித்தான் எலிசாவின் முன்னுரைப்பு [7:1] உண்மையாகுமா" என ராஜா பதிலுரைத்திருந்தால் அது பாராட்டப்படக் கூடியதாக இருந்திருக்கும். அதற்கு பதிலாக, "இது உண்மையாயிருக்க சாத்தியமில்லை" என அவன் நினைத்தான். அவன் தன் வேலைக்காரரை நோக்கி, "சீரியர் நமக்குச் செய்கிற காரியத்தை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நாம் பட்டினியாயிருக்கிறோம் என்று அவர்கள் அறிவார்கள்; ஆகையால் நாம் பட்டணத்திலிருந்து புறப்பட்டுப் போனால் நம்மை உயிரோடே பிடித்துக்கொண்டு பட்டணத்திற்குள் பிரவேசிக்கலாம் என்று எண்ணி, அவர்கள் பாளையத்தைவிட்டு புறப்பட்டு வெளியில் ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றான் (2 இராஜாக்கள் 7:12ஆ). யோசுவா, ஆயி பட்டணத்தைத் தோற்கடிப்பதற்கு இப்படிப்பட்ட ஒரு யுக்தியைப் பின்பற்றினான் (யோசுவா 8).*

*ராஜாவின் வேலைக்காரரில் ஒருவன் ராஜா தனக்கு சொல்லப்பட்ட செய்தி உண்மையா இல்லையா என்பதை பரிசோதித்துப் பார்க்கவேண்டும் என்று ஆலோசனை கூறினான். வேலைக்காரன் அவரை நோக்கி, "இங்கே மீதியான குதிரைகளில் ஐந்து குதிரைகளைக் கொண்டுபோக உத்தரவு கொடும்" என்றான் (2 இராஜாக்கள் 7:13அ). அநேகமாக பட்டணத்தின் மற்ற குதிரைகளெல்லாம் மரித்து போய்விட்டன (அநேகமாக அவைகள் உணவாக உட்கொள்ளப்பட்டிருக்கலாம்). வேலைக்காரன் "இதோ, இங்கே மீதியான இஸ்ரவேலின் சகல ஏராளத்திலும், மாண்டுபோன இஸ்ரவேலின் சகல கூட்டத்திலும், அவைகள் மாத்திரம் மீந்திருக்கிறது; அவைகளை நாம் அனுப்பிப் பார்ப்போம்" என்றான் (வசனம் 13ஆ). அடிப்படையில் அவன் கூறியது என்னவென்றால், "அனுப்பப்பட்டவர்களுக்கு நேரிடச் சாத்தியமான மிக மோசமான காரியம் அவர்கள் கொல்லப்படுவதாக இருக்கும். அவர்கள் பட்டணத்தில் இருந்தாலும் சாகத்தான் போகிறுர்கள். ஆகவே அவர்களை ஏன் அனுப்பக் கூடாது? நாம் இழப்பதற்கு என்ன இருக்கிறது?"*

*இறுதியாக, "இரண்டு இரதக் குதிரைகளை" அனுப்புவது என்று முடிவானது (வசனம் 14). குஷ்டரோகிகள் கூறியபடி, சாரதிகள் முகாம் காலியாயிருப்பதைக்*

*கண்டார்கள். அவர்கள் தப்பி ஓடிய சீரியரை யோர்தான் வரை பின்தொடர்ந்து சென்றார்கள்.[6] "சீரியர் தீவிரித்து ஓடுகையில், அவர்கள் எறிந்து போட்ட வஸ்திரங்களாலும் தட்டுமுட்டுகளாலும் வழியெல்லாம் நிறைந்திருந்தது" (வசனம் 15அ).*

*செய்தியாளர்கள் திரும்பி வந்து, அதை ராஜாவுக்கு அறிவித்தார்கள் (வசனம் 15ஆ). செய்தி விரைவாக பட்டணத்தை எட்டியது மற்றும் கதவுகள் சீக்கிரமாக திறக்கப்பட்டன. "அப்பொழுது ஜனங்கள் புறப்பட்டு, சீரியரின் பாளையத்தைக் கொள்ளையிட்டார்கள்" (வசனம் 16அ). அவர்கள் புசித்து திருப்தியடைந்தார்கள்; அவர்கள் விடுதலையடைந்திருந்தார்கள்! கர்த்தர் தான் அவர்கள் விடுதலைக்கு காரணமானவராக இருந்தார், ஆனால் அவர் தன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, இவர்கள் கூட இதற்கு பயன்படுவார்களா என யோசிக்கத் தோன்றும் நான்கு பேரை பயன்படுத்தினார்: நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள விருப்பமாயிருந்த நான்கு குஷ்டரோகிகள்!*

## நிகழ்காலத்துக்கான நற்செய்தி

*இந்த கதையிலிருந்து, பல கருத்துக்களை பொருத்திப்பார்க்கலாம். ஆனால் நான் வசனம் 9இல் "நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; நாம் போய் … இதை அறிவிப்போம் வாருங்கள்" என்ற குஷ்டரோகிகளின் வார்த்தைகள் மேல் நமது கவனத்தை வைக்க நான் விரும்புகிறேன். அந்த குஷ்டரோகிகளின் சூழ்நிலை மற்றும் நமது சூழ்நிலைக்கிடையில் நாம் பல ஒப்பீடுகளை உருவாக்க முடியும்.*

### நமக்கான நற்செய்தி

*குஷ்டரோகிகளின் வாக்கியத்தில் நமது கவனத்தை முதலில் ஈர்ப்பது "நற்செய்தி" என்ற வார்த்தையாகும். "சுவிசேஷம்" என்பது சொல் அர்த்த ரீதியாக "நற்செய்தி" என பொருள்படுகிறது என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது. சுவிசேஷத்தின் இருதயம் போன்ற பகுதியானது, இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலாக இருக்கிறது (1 கொரிந்தியர் 15:1-4). நாம் இன்றும், "இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்" என கூறமுடியும்: நாம் பாவத்தில் இழந்துபோனவர்களாயிருந்தோம், ஆனால் இயேசுவானவர் நமது பாவங்களை தம்மேல் ஏற்றுக்கொண்டு நமக்காக மரித்தார் (1 கொரிந்தியர் 15:3; 2 கொரிந்தியர் 5:21; ஏசாயா 53:6)! குஷ்டரோகிகள், பகிர்ந்து கொள்வதற்கு சரீர நன்மைகளைக் குறித்து ஒரு நற்செய்தியை உடையவர்களாக இருந்தார்கள்; நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை குறித்து பகிர்ந்து கொள்வதற்கான ஒரு நற்செய்தியை உடையவர்களாக இருக்கிறோம்!*

*பல ஒப்பீடுகள் உருவாக்கப்பட முடியும். இந்த உலகம் பாவத்தால் "முற்றுகையிடப்பட்டுள்ளதாக" நாம் எடுத்துக்கொள்ளலாம் (காண்க எபேசியர் 6:12). கிறிஸ்துவை சாராதவர்கள் நம்பிக்கையற்றவர்களாக ஆவிக்குரிய முறையில் "பட்டினியாயிருக்கிறார்கள்" (காண்க எபேசியர் 2:12). இருப்பினும், தேவனானவர் தம்முடைய இரக்கத்தினாலே, மனுக்குலம் மீட்கப்படுவதற்கான ஏற்பாட்டை செய்துள்ளார் (காண்க தீத்து 3:4, 5; நடபடிகள் 2:38). இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஒவ்வொரு நபரும் பாவத்தின்மேல் வெற்றி கொள்ள*

*முடியும் (1 கொரிந்தியர் 15:56, 57). பங்கு பெற விரும்புகிற யாவருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் ஒரு "விருந்து" கிடைக்கக்கூடியதாயிருக்கிறது (காண்க மத்தேயு 22:9).*

*அந்த நான்கு தொழுநோயாளிகளைப் போல நம்மில் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாயிருக்கிறவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களின் அளிப்பை அனுபவிக்கிறவர்களாயிருக்கிறோம். "பட்டினியாயிருத்தல்" என்ற நிலையிலிருந்து "திருப்தியாயிருத்தல்" என்ற நிலைக்கு நாம் கடந்து வந்திருக்கிறோம் (காண்க மத்தேயு 5:6). நாம் ஆவிக்குரிய முறையில் "தரித்திரர்கள்" என்ற நிலையிலிருந்து "ஐசுவரியவான்கள்" என்ற நிலைக்கு முன்னேறி சென்றுள்ளோம் (காண்க 2 கொரிந்தியர் 6:10; மத்தேயு 5:3). எத்தனை அருமையான வாக்குத்தத்தங்களும் ஆசீர்வாதங்களும் நமக்கு அருளப்பட்டுள்ளன! (காண்க எபேசியர் 3:20; பிலிப்பியர் 4:19; எபிரெயர் 7:25.) நாமும் பவுலுடன் சேர்ந்து, "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக (2 கொரிந்தியர் 9:15) - அவருடைய குமாரனுடைய ஈவுக்காக - அவருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோமாக!*

***மற்றவர்களுக்கான நற்செய்தி?***

*நமக்குரிய கேள்வி இது தான்: நமக்கு இருப்பதிலிருந்து உலகத்தின் மிக அவசரமான தேவை என்ன என்பதை நாம் புரிந்து கொள்கிறோமா? பாவத்தில் இழந்துபோனவர்களோடு நாம் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளத் தவறினால், அந்த தொழுநோயாளிகளைப் போல, "நாம் செய்கிறது நியாயம் அல்ல" என நாம் கூறவேண்டும்.*

*துக்கப்படும் விதத்தில், நாம் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எப்போதும் மற்றவர்களுக்கு கூறவில்லை. காரியம் ஏன் இப்படி இருக்கிறதென்று எனக்கு நிச்சயமாக தெரியவில்லை. சிலர், "கர்த்தர் தயையுள்ளவரென்பதை உண்மையில் ருசிபார்த்திராமல்" இருப்பதற்கான சாத்தியக்கூறும் இருக்கலாம் (1 பேதுரு 2:1); வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் தாங்களே இன்னமும் இரட்சிக்கப்படாமல் இருக்கலாம். அந்திரேயா கர்த்தரை கண்டுபிடித்தவுடனே, ஓடிப்போய் மற்றவருக்கு அறிவித்தான் (யோவான் 1:40-42); அதுதான் இயல்பான பதில் செயலாயிருக்கிறது. ஒருவர் நற்செய்தியை அறிவிக்க வேண்டுமென்ற வற்புறுத்தல் உணர்வு இல்லாமல் இருப்பாரானால், அவர் கர்த்தரோடு தனக்குள்ள உறவை பரிசோதித்து பார்க்க வேண்டும்.*

*கர்த்தர் நமக்காக என்ன செய்துள்ளார் என்பதை நாம் முழுமையாக பாராட்டாமலிருப்பது இன்னொரு சாத்தியக்கூறாயிருக்கலாம் (காண்க 2 பேதுரு 1:9ஆ). நாம் உண்மையில் அதை பாராட்டக் கூடியவர்களாயிருப்போமானால், நாம் செய்தியை பகிர்ந்து கொள்ளவும் விரும்புவோம் (லூக்கா 8:39)!*

*சில சமயங்களில் நாம் மற்றவர்களுக்கு நற்செய்தியை சொல்லத்தவறுவது என்பது மற்றவர்கள்மேல் நமக்கு கரிசனை இல்லாமல் இருக்கிறது என்பதை காட்டுகிறது. நமது அயலகத்தார் சரீரபிரகாரமாக பட்டினியாயிருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்தால், அவர்களுக்கு உணவை மறுக்கும் அளவுக்கு நாம் இதயமற்றவர்களாக இருக்கமாட்டோம். நம்மை சுற்றிலுமுள்ளவர்கள் ஒருவேளை சரீரபிரகாரமாய் பட்டினியாய் இருக்கமாட்டார்கள், ஆனால் அவர்கள் ஆவிக்குரிய முறையில் "பட்டினியாயிருக்கிறார்கள்." நாம் அவர்களுக்கு*

*திருவசனமாகிய "ஞான பாலை" மற்றும் "ஞான ஆகாரத்தை" எடுத்துச் செல்ல தவறினால் (1 பேதுரு 2:3; எபிரேயர் 5:12;* KJV*), அது நம்மை பற்றி என்ன கூறுகிறது? உண்மையில், "நாம் செய்கிறது நியாயமல்ல."*

*நாம் எப்படியோ கிறிஸ்துவத்தின் சாராம்சத்தைத் தவறவிட்டுவிட்டோம் என்பது நமது பிரச்சனையாக இருக்கலாம். ஆரம்பகால கிறிஸ்தவர்கள் தாங்கள் சந்தித்த யாவரோடும் நற்செய்தியை பகிர்ந்து கொள்ள ஆவலோடிருந்தார்கள் (காண்க நடபடிகள் 5:42; 8:1, 4). அப்படிச் செய்ததினால், அவர்கள் கர்த்தரின் பிரதான கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள் (மத்தேயு 28:18-20; காண்க 10:27).*

*கர்த்தருக்கு கீழ்ப்படிவதற்கான நம்முடைய விருப்பம், மற்றும் இழந்துபோனவர்களுக்கான நம்முடைய அன்பு என இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்கு பல காரணங்களை உடையவர்களாயிருக்கிறோம். தொழுநோயாளிகளை உணர்த்தின, "நாம் மவுனமாயிருந்தால் ... தண்டனை நம்மேல்வரும்" என்ற இன்னொரு காரணத்தையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். எசேக்கியேல் 3:18ல் " 'சாகவே சாவாய்' என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்கு சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்" என்ற கர்த்தருடைய தெளிவான வசனத்தை நாம் கவனிக்கிறோம்.*

*உண்மையிலே, இது ஒரு "நற்செய்தியின் நாள்" ஆக இருக்கிறது! நமது கடந்த காலத்தைப் பொருத்தவரை, நாம் அமைதலாயிருந்தபடியால், நாம் நியாயமானதை செய்யவில்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்; ஆனால் எதிர்காலத்தை பொருத்தவரை, "ஆகவே நாம் போய் ... அதை அறிவிப்போம் வாருங்கள்" என்ற அந்த தொழுநோயாளிகளின் வார்த்தைகளைப் பிரதிபலிப்போமாக!*

## முடிவுரை

*நாம் ஒவ்வொருவரும் நற்செய்தியாகிய சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை ஊக்குவிக்கும்படி இந்த பாடம் கிறிஸ்தவர்கள் வசமாய் விவாதிக்கப்பட்டது. இருப்பினும், நாம் முடிக்கும் நிலையில், கர்த்தருடைய அளிப்பை இன்னும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தாதவர் எவரோ அவருக்காக நான் இதை பொருத்திபார்க்க விரும்புகிறேன். அந்த தொழுநோயாளிகள் பட்டணத்திற்கு வெளியே பட்டினியால் வாடிக்கொண்டிருக்கையில், "நாம் இங்கேயிருந்து சாக வேண்டியது என்ன?" எனக் கேட்டார்கள் (2 இராஜாக்கள் 7:3). அவர்களுடைய கேள்விக்கு இணையான ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புவேன்: "நீங்கள் ஏன் அசையாதவர்களாக, அசைக்கப்படமுடியாதவர்களாக - நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சிலும் மரணத்தை நெருங்கிக்கொண்டு, அங்கே ஏன் அமர்ந்திருக்கிறீர்கள்?" நீங்கள் மரிக்கும் வரையிலும் அங்கேயே அமர்ந்திருக்கமாட்டீர்களென்று நான் என் முழு இருதயத்தோடு உங்களுக்காக ஜெபிக்கிறேன்! நீங்கள் இயேசுவை விசுவாசித்தால் (யோவான் 3:16) மற்றும் உங்கள் பாவங்களிலிருந்து மனந்தி*

*ரும்பியிருப்பீர்களானால் (லூக்கா 13:3), அனனியா சவுலை நோக்கி, "இப்போழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என கேட்டதுபோல, நான் உங்களை வருந்தி கேட்கிறேன்" (நடபடிகள் 22:16)!*

---

குறிப்புகள்

[1]*ஏவுதல் பெறாத ஒரு யூத பாரம்பரியம் இந்த மனிதர்கள் கேயாசி மற்றும் அவனுடைய மூன்று மகன்களாயிருந்தார்கள் என கூறுகிறது* (Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua - Esther* [New York: Abingdon - Cokesbury Press, n.d.], 504; Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961], 409). [2]*"முன்னணி புறநகர்" என்பது சமாரிய பட்டணத்தின் மிக அருகில் அமைந்திருந்த சீரியா இராணுவ முகாமைக் குறிக்கிறது.* [3]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 55. [4]*கல்வியாளர்கள் இது முத்தாரி அல்லது முசூர் அல்லது வேறு ஒரு இடமாக இருக்க வேண்டுமெனக் கருதுகிறார்கள். நான் பரிசோதித்த ஒவ்வொரு மொழிபெயர்ப்பிலும் "எகிப்தியர்கள்" என்றுள்ளது.* [5]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 535. [6]*இராணுவம் ஆராமுக்கு செல்வதற்கு இரண்டு வழித்தடங்கள் இருந்தன. அவர்கள் வடக்கு திசையில் சென்று பின் கிழக்கு நோக்கி செல்லலாம் அல்லது அவர்கள் யோர்தானை கடந்து கிழக்கில் சென்று, பின் வடக்கு நோக்கி செல்லலாம். அவர்கள் இரண்டாவது வழித்தடத்தை தெரிந்துகொண்டிருந்தார்கள்.*